## வ/ப எல்ஆர்டிசீ சேவைகள் (தனியார்) கம்பனி - 2023

-----------------------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வ/ப எல்ஆர்டிசீ சேவைகள் (தனியார்) கம்பனியின் (''கம்பனி'') 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு உரிய தகவல்களையும் உள்ளடக்கி நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து கம்பனியின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது

கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கான இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களின் தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) நியமத்தின் 2 ஆம் பிரிவு** | | |
| எண்ணக்கரு மற்றும் பரவலாக்கல் தத்துவங்களின் 2.52 ஆம் பந்தியின் பிரகாரம் நியமத்தின் மூலம் நிர்ணயிக்கப்படாது இருக்குமாயின் நிறுவனத்தின் வருமானம் மற்றும் செலவினம் ஒன்றுக்கொன்று ஈடு செய்ய முடியாதிருந்த போதும் கம்பனி சேவை பங்களிப்பு நிறுவனத்தில் இருந்து அறவிட்ட தண்டப்பணம் விற்பனை வருமானத்தில் கழிக்கப்பட்டு காண்பிக்கப்பட்டதன் காரணமாக விற்பனை வருமானம் ரூபா 33.79 மில்லியனால் குறை கணிப்பீட்டிற்கு உட்பட்டிருந்தது. | தண்டப்பணம் மற்றும் மிகைக் கட்டணம் நிறுவனத்தால் உழைக்கப்படாத விற்பனை வருமான பெறுமதியாக இருந்ததுடன் இந்த இரட்டை சீராக்கத்தின் பின்னர் தேறிய விற்பனைப் பெறுமதி மாத்திரம் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | நியமத்தின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| **(ஆ) நியமத்தின் 07 ஆம் பகுதி** | | |
| (i) நியமத்தின் 7.2 ஆம் பந்திக்கு முரணாக கம்பனியால் அரசாங்க வங்கி ஒன்றில் வைப்புச் செய்யப்பட்டு 03 மாத காலத்தில் முதிர்ச்சியடைகின்ற ரூபா 8 மில்லியன் பெறுமதியான நிலையான வைப்புக்களின் பெறுமதி முதலீட்டின் கீழ் உள்ளடக்கப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியில் நிதி நிலைமைக் கூற்றில் காசு மற்றும் காசுக்கு சமமானவைகள் அப்பெறுமதியால் குறை கணிப்பீட்டுக்கு உட்பட்டு முதலீடு அப்பெறுமதியால் மிகை கணிப்பீட்டிற்கு உட்பட்டிருந்தது. | 03 மாத கால வீச்சின் போது மீண்டும் மீண்டும் புதுப்பிப்பதற்கு உட்படுகின்றமையால் அந்த சொத்து முதலீட்டின் கீழ் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. | நியமத்தின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ii) காசுப் பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து உருவான காசுப் பாய்ச்சலைக் கணிப்பிடும் போது அதில் அகற்றப்பட வேண்டிய வட்டி வருமானம் ரூபா 16.42 மில்லியன் அகற்றப்படாமையின் காரணமாக செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து உருவான காசுப் பாய்ச்சல் அப்பெறுமதியால் மிகைக் கணப்பீட்டுக்கு உட்பட்டிருந்ததுடன் முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்து உருவான காசு அப்பெறுமதியால் குறை கணிப்பீட்டுக்கு உட்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நியமத்தின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |

**(இ) நியமத்தின் 10 ஆம் பிரிவு**

| | | |
|---|---|---|
| நியமத்தின் 10.21 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவனத்தால் இனங்காணப்பட்ட பொருண்மையான முன்னைய காலப் பகுதியின் தவறுகள் அதன் (அ) மற்றும் (ஆ) பிரிவுகளின் பிரகாரம் சரி செய்யவேண்டி இருந்த போதிலும் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்குரிய ரூபா 9.21 மில்லியன் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி மீளாய்வாண்டின் போது வருமானமாக இனங்காணப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின் வருமானம் அப் பெறுமதியால் மிகைக் கணிப்பீட்டிற்கு உட்பட்டிருந்தது. | NBT சட்டம் நீக்கப்பட்டதன் அடிப்படையில் இந்த தொகை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பும் கடப்பாடு ஒன்று விடுவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இது தற்போதயை காலப்பகுதியில் உருவான நிலைமையின் அடிப்படையில் ஏற்பட்டமையால் நடப்பாண்டில் மாத்திரம் தாக்கம் ஏற்பட்ட கொடுக்கல் வாங்கல் மாத்திரம் ஆகும். | நியமத்தின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |

**(ஈ) நியமத்தின் 13 ஆம் பிரிவு**

| | | |
|---|---|---|
| நியமத்தின் 13.19 ஆம் பந்தியின் பிரகாரம் கம்பனியால் ரூபா 77,968 பெறுமதியான மாதிரி இருப்புக்கள் (Sample) 14 விடயங்களும், ரூபா 6.77 மில்லியன் பெறுமதியான Metal Detectors 731 மற்றும் ரூபா 2.4 மில்லியன் பெறுமதியான CCTV உபகரணங்கள் 587 உம் ஆக கூட்டுமொத்தமாக ரூபா 9.25 மில்லியன் பெறுமதியான இருப்புக்கள் 05 வருடங்கள் முழுவதும் விற்பனை செய்யாமல் காணப்பட்டிருந்த போதிலும் அதற்குரிய இழப்பீட்டு நட்டம் இனங்காணப்பட்டிருக்க வில்லை. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றோம். | நியமத்தின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |

**(உ) நியமத்தின் 17 ஆம் பிரிவு**

| | | |
|---|---|---|
| (i) நியமத்தின் 17.33 ஆம் பந்தியின் பிரகாரம் கம்பனியால் 2021 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட மோட்டார் வாகன மீள்மதிப்பீட்டுக்கு உரிய எந்த ஒரு வெளிப்படுத்தலும் மேற்கொள்ளப்படாமல் இருந்ததுடன் அந்த மீள்மதிப்பீட்டிற்காக சுயாதீன மதிப்பீட்டாளரின் பங்கு பற்றல் ஒன்று இருந்தமையும் கணக்காய்வில் அவதானிக்கப்படவில்லை. | வெளிப்படுத்தப்படாத குறைபாடுகள் ஏற்றுக்கொள்வதுடன் இந்த மதிப்பீடு மூன்று பேரை உடைய குழுவின் மூலமே மேற்கொள்ளப்பட்டுள்ளது. | நியமத்தின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | நியமத்தின் 17.19 ஆம் பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் கம்பனிக்குரிய ரூபா 12.23 மில்லியன் ஆன முழுமையாக பெறுமானத் தேய்று செய்யப்பட்ட தொடர்ந்தும் பயன்படுத்தப்படுகின்ற 229 நிலையான சொத்து விடயங்கள் காணப்பட்ட போதும் அந்த சொத்துக்கள் தொடர்பாக மதிப்பீடு செய்யப்பட்ட வழுக்களை சரி செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் மீள்மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நியமத்தின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |

**(ஊ) நியமத்தின் 28 ஆம் பிரிவு**

| | | |
|---|---|---|
| நியமத்தின் 28.18 ஆம் பந்தியின் பிரகாரம் தீர்மானிக்கப்பட்ட இலாப திட்டங்கள் உரிய கம்பனியால் கணிப்பிடப்பட்ட காலப் பகுதிக்குரிய ஊழியர் பணிக்கொடை செலவினம் ரூபா 37.42 மில்லியன் ஆக இருந்த போதும் கம்பனியால் ரூபா 32.8 மில்லியன் மாத்திரம் வருமானக் கூற்றில் இனங்காணப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின் இலாபம் ரூபா 4.62 மில்லியனால் மிகைக் கணிபீட்டுக்கு உட்பட்டிருந்தது. அவ்வாறே நியமத்தின் 28.24 (அ) மற்றும் (ஆ) பந்திகளின் பிரகாரம் ரூபா 19.97 மில்லியன் ஆன ஆயட்கால நட்டம் ஏனைய விரிவான வருமானத்தின் கீழ் இனங்காணப்படாது இருந்ததுடன் நியமத்தின் 28.41 ஆம் பந்தியின் பிரகாரம் தீர்மானிக்கப்பட்ட நலன் திட்டங்களுக்கு (Defined Benefit Plan) உரியதாக மேற்கொள்ள வேண்டிய வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | Defined Benefit Plan கீழ் வருகின்ற அவதானிப்புக்களை ஏற்றுக்கொள்வதுடன் எதிர்காலத்தில் இதனை குறிப்புக்கள் மூலம் வெளிப்படுத்தி சரியான பிரகாரம் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நியமத்தின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கம்பனியில் இணக்கம் செய்யப்படாத கடன்பட்டோர் மீதி ரூபா 1.28 மில்லியன் ஆக இருந்ததுடன் இந்த கடன்பட்டோர் மீதியை குறித்துரைத்தவாறு இனங்கண்டு உரிய கடன்பட்டோர் கணக்கை சரி செய்வதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்படாமல் இருந்ததுடன் நிதி நிலைமைக் கூற்றில் கடன்பட்டோர் பெறுமதியில் இந்த பெறுமதி குறைக்கப்பட்டு கடன்பட்டோர் மீதி காண்பிக்கப்பட்டிருந்தது. | இணக்கம் செய்யப்படாத கடன்பட்டோர் மீதி ரூபா 1.27 மில்லியன் தொகை 2024 இன் போது இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கடன்பட்டோரை குறித்துரைத்தவாறு இனங்கண்டு கடன்பட்டோர் கணக்குகள் சரி செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 45.7 மில்லியன் கடன்பட்டோர் மீதி உறுதிப்படுத்தல் கடிதம் 09 இற்கு உரிய கொடுப்பனவுக்கு இணங்கப்பட்ட பெறுமதி ரூபா 21.23 மில்லியன் ஆனமையால் அதனிடையே ரூபா 24.4 மில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டது. இந்த நிலைமைக்கு தாக்கமளித்த காரணம் கணக்காய்விற்கு தெளிவுபடுத்தப்பட்டிருக்கவில்லை. | சேவைப் பங்களிப்பு நிறுவனங்களின் கடன்பட்டோர் மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதம் அனுப்பும் போது ஆண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு மீதி அல்லாமல் மீதி உறுதிப்படுத்துகின்ற தினத்தில் காணப்படுகின்ற கடன்பட்டோர் மீதியாக இருந்தமை வேறுபாட்டிற்கான காரணம் ஆகும். | கடன்பட்டோர் மீதிகளின் வேறுபாட்டிற்கான காரணங்களை கண்டறிந்து தீர்த்து வைத்தல் வேண்டும். |
| (இ) | கம்பனியால் தாய் கூட்டுத்தாபனத்தில் இருந்து கிடைத்த CCTV ஒப்பந்தத்திற்கு உரிய கூட்டுத்தாபனத்தில் இருந்து கிடைக்காத ரூபா 1.59 மில்லியன் விற்பனை தொகையில் கழிக்கப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டதன் காரணமாக விற்பனை வருமானம் அப் பெறுமதியால் குறை கணிப்பீட்டுக்கு உட்பட்டிருந்தது. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றோம். இதனை சரி செய்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | விற்பனை வருமானம் சரியாக நிதிக் கூற்றுக்களில் காண்பித்தல் வேண்டும். |
| (ஈ) | கம்பனியால் அதன் தாய் கம்பனியான நிலமீட்டல் மற்றும் அபிவிருத்தி கம்பனிக்கு மீளாய்வாண்டின் போது 2.48 மில்லியன் பெறுமதியான பாதுகாப்பு சேவையும், ரூபா 4.88 மில்லியன் பெறுமதியான மனித வலு சேவையும் அதன் பிரதான தாய்க் கம்பனியான (Ultimate parent) இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனத்திற்கு மீளாய்வாண்டின் போது ரூபா 89.15 மில்லியன் பெறுமதியான பாதுகாப்பு சேவையும், ரூபா 426.11 மில்லியன் பெறுமதியான மனித வலு சேவையும் வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த சேவைகளை வழங்கும் போது உள்ளக கம்பனிகளுக்கு இடையே விலையைத் தீர்மானிக்கின்ற அடிப்படை நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | அந்த வெளிப்படுத்தல்கள் 2024 ஆம் ஆண்டில் நிதி அறிக்கைகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | உரிய வெளிப்படுத்தல்கள் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படல் வேண்டும். |
| (உ) | கம்பனியால் வழங்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மற்றும் கணக்கீட்டு மென் பொருளில் இருந்து பெறப்பட்ட நிதிக் கூற்றுக்களுக்கு இடையே விற்பனைக் கிரயம் ரூபா 50.43 மில்லியன், நிருவாகம் மற்றும் ஏனைய செலவினம் ரூபா 67.66 மில்லியன் மற்றும் நிதிச் செலவினம் ரூபா 1.84 வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டது. | நிதி அறிக்கைகளில் மாதிரிகளின் வேறுபாடுகள் ஏற்படும் போது அந்த முறையில் QB Package இல் மேற்கொள்ள முடியாதிருந்தமையால் இந்த நிலைமை எழுந்திருந்தது. | வேறுபாட்டிற்கான காரணங்களை கண்டறிந்து சரி செய்தல் வேண்டும். |

## 1.6 பெற வேண்டி மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் கம்பனியின் வியாபார கடன்பட்டோர் மீதி ரூபா 1,557.36 மில்லியன் ஆக இருந்ததுடன் அதில் ரூபா 62.89 மில்லியன் 01 இற்கும் 02 வருடங்களுக்கும் இடையில் காணப்பட்டதுடன் 02 இற்கும் 05 வருடங்களுக்கும் இடையிலான காலத்தில் இருந்து அறவிட வேண்டிக் காணப்பட்ட பெறுமதி ரூபா 110.18 மில்லியன் ஆகும். அவ்வாறே 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தில் இருந்து அறவிட வேண்டியதாகக் காணப்பட்ட பெறுமதி ரூபா 25.33 மில்லியன் ஆகும். இந்த கடன்பட்டோர் மீதிகளில் ரூபா 1,251.6 மில்லியன் பாதுகாப்பு சேவை வழங்கியதற்காக இருந்ததுடன் அந்த மீதியில் இருந்து 53 சதவீதத்திற்கு மேற்பட்ட அளவு அதாவது ரூபா 669.63 மில்லியன் சுகாதார அமைச்சில் இருந்து கிடைக்க வேண்டிய மீதியாக இருந்ததுடன் 14 சதவீதம் அதாவது ரூபா 171.78 மில்லியன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையில் இருந்து அறவிட வேண்டிய மீதியாகும். இந்த கடன்பட்டோர் மீதிகளில் ரூபா 302.54 மில்லியன் மனித வலு வழங்கியதற்காக 04 நிறுவனங்களில் இருந்து அறவிட வேண்டிக் காணப்பட்டது. | இந்த அவதானிப்புக்களுடன் இணங்குகின்றோம். தற்போது கடன் சேகரிக்கும் நடவடிக்கைகள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டு அதனை சரியாக முகாமைத்துவம் செய்வதன் காரணமாக இந்த கடன்பட்டோர் மீதி ரூபா 1,557 மில்லியனில் இருந்து ரூபா 1,150 மில்லியன் வரை குறைவடைந்துள்ளது. | கடன்பட்டோர் மீதியை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதி வரையில் பாதுகாப்பு சேவை மற்றும் மனித வலு சேவையினை வழங்கியதற்காக முறையே தாய் கம்பனியான நில மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கம்பனியில் இருந்து ரூபா 17.86 மில்லியன் மற்றும் ரூபா 25.13 மில்லியன் மற்றும் இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தில் இருந்து (Ultimate parent) ரூபா 41.05 மில்லியன் மற்றும் ரூபா 82.94 மில்லியன் கிடைக்க வேண்டிய மீதி காணப்பட்டது. நில மீட்டல் மற்றும் அபிவிருத்தி கம்பனியில் இருந்து மனித வலு சேவை வழங்கியதற்காக ரூபா 15.44 மில்லியன் தொகை 04 வருட காலத்தில் இருந்து கிடைக்க வேண்டிக் காணப்பட்டதுடன் இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தில் இருந்து கடந்த ஆண்டில் வழங்கப்பட்ட தொழில் நுட்ப சேவைகள் (Technological Solution), ஏனைய பெறுவனவுகள் மேற்கொள்ளப்பட்ட செலவினங்களுக்காக ரூபா 20.5 மில்லியன் கம்பனிக்கு கிடைக்க வேண்டியிருந்தது. | அறவிட வேண்டிய நிலவைப் பணம் தொடர்பாக காண்பிக்கப்பட்டுள்ள பகுப்பாய்வு சரியானதாகும். REDECO நிறுவனம் நிதி நிலைமை சிறந்த நிலைக்கு வந்த பின்னர் இந்த கடனை அறவிடும் இயலும் காணப்படும் என அறியத்தருகின்றோம். | நிலுவைப் பணத்தை விரைவாக அறவிடுவதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனியில் இருந்து சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தர்களுக்கு உரிய மீளாய்வாண்டின் இறுதி வரையில் செலுத்த வேண்டிய சம்பளமாக ரூபா 49.76 மில்லியன் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டதுடன் அதில் மீளாய்வாண்டிற்குரிய ரூபா 17.72 மில்லியன் ஆக இருந்ததுடன் மிகுதி ரூபா 32.04 மில்லியன் 01 இற்கும் 05 வருடங்களுக்கும் இடையிலான காலத்தில் இருந்து காணப்பட்டது. | செலுத்தப்படாத சம்பளம் ரூபா 49.75 மில்லியன் அளவாக இருந்ததுடன் அதில் 05 வருடங்களுக்கு மேற்பட்ட சகல செலுத்தப்படாத சம்பளங்களும் ஏனைய வருமானமாக கருதப்படுகின்றது. | செலுத்த வேண்டிய சம்பளம் கால ரீதியில் தீர்த்து வைக்கப்படல் வேண்டும். |

## 1.7 சட்டங்கள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடான தொடர்பு | | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 166 ஆம் பிரிவு | ஒவ்வொரு கம்பனியினதும் பணிப்பாளர் சபையினால் ஐந்தொகைத் திகதியின் பின்னர் 06 மாதங்களுக்குள் அத்திகதியில் முடிவடைந்த கணக்கு காலப் பகுதியில் கம்பனியின் செயற்பாடுகள் தொடர்பான வருடாந்த அறிக்கை ஒன்று தயாரிக்க வேண்டியிருந்த போதிலும் கம்பனி அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வருடாந்த அறிக்கை குறித்துரைத்த பிரகாரம் தயாரிக்கும் நடவடிக்கைகள எதிர்காலத்தில் மேற்கொள்வதற்கு உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 15 ஆம் பந்தி | கணக்காய்வு செய்யப்பட்ட அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்கள் மற்றும் அது தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயத்துடன் வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் கம்பனியால் 2018 ஆம் ஆண்டு முதல் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இத தொடர்பான விடயங்களைக் கண்டறிந்து எதிர்காலத்தில் சரி செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 2021 நவம்பர் 16 ஆம் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் 01/2021 | | | |
| (i) | கைநூலின் 2.3 ஆம் பந்தி | பாதுகாப்பு சேவை வழங்குதல், தொழில்நுட்ப ரீதியான தீர்வுகள், பாதுகாப்பு புலனாய்வுகள், மனித வலு சேவை மற்றும் ஏனைய புலனாய்வு சேவைகளை வழங்குதல் கம்பனியின் பிரதான பணியாக இருந்ததுடன் அதனை அடைந்து கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட பௌதீக மற்றும் நிதிசார் இலக்கை காண்பிக்கின்ற செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்றை கம்பனி தயாரித்திருக்கவில்லை. அவ்வாறே கம்பனியின் முன்னுரிமைப் பணிகளுக்காக பிரதான செயலாற்றல் குறிகாட்டிகள் முகாமைத்துவத்தால் மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக கம்பனியின் மீளாய்வாண்டின் செயலாற்றலை மதிப்பிடுவதற்கு கணக்காய்வின் போது முடியாதிருந்தது. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றோம். 2024 ஆம் ஆண்டின் போது இது வரையில் 04 வருடங்களுக்காக தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரித்து அதற்காக பணிப்பாளர் சபை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஆலோசனைகளுக்கு இணங்க நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். |
| (ii) | வழிகாட்டிக் கோவையின் 3.5 ஆம் பந்தி | அரசாங்க நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள் அமைச்சு அல்லது ஏனைய அரசாங்க நிறுவனங்களில் சேவைக்காக விடுவிக்க முடியாதிருந்தமை தீர்மானிக்கப்பட்டிருக்கும் போது கம்பனியின் 03 ஊழியர்கள் ஏனைய அரச நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது சம்பளமாக ஊழியர்களுக்கு செலுத்தப்பட்ட ரூபா 2.02 மில்லியன் தொகை மீளளிப்புச் செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டின் போது கம்பனியின் மூன்று ஊழியர்கள் (03) கூட்டுத்தாபனத்தின் சேவை நடவடிக்கைகளுக்காக விடுவிக்கப்பட்டிருந்தமை ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்ததுடன் அவர்களின் சகல கொடுப்பனவுகளுக்கும் உரிய வரவுத் தாள் (Debit Note) தயாரித்து கையளிக்கப்பட்டுள்ளது. | வழிகாட்டியின் ஆலோசனைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2019 நவம்பர் 20 ஆம் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் PED/P/2/25(i) என்ற | அரசாங்கத்திற்குச் சொந்தமான தொழில் முயற்சிகளின் மூலம் மீண்டும் அறிவிக்கும் வரை சகல சமூக செயற்பாடுகளும் கைவிட வேண்டி இருந்தமையும் அவ்வாறு ஏதாவது சமூக அவசர செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதாயின் அது தொடர்பாக பிரதான கணக்கீட்டு | தியத்சர நெத்துரு சமூக செயற்பாட்டு செயற்திட்டம் சில வருடங்களாக கொரோனா போன்ற தொற்று நோயின் காரணமாக சதாரண பொது மக்களுக்கு முகங்கொடுத்திருந்த வசதியீனம் மற்றும் | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| சுற்றறிக்கை மற்றும் 2022 ஏப்ரல் 08 ஆம் திகதிய தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை இலக்கம் 04/2022 இன் 2.7 ஆம் பந்தி | உத்தியோகத்தர், முகாமைத்துவ சபை அங்கத்தவர்கள் மற்றும் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் தனிப்பட்ட ரீதியில் அது தொடர்பாக பொறுப்பு வாய்ந்ததாக இருக்க வேண்டியமைக்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதிலும் அதற்கு முரணாக கம்பனியால் ரூபா 5.05 மில்லியன் ஆன சமூக அவசர செயற்பாடுகளுக்காக செலவிடப்பட்டிருந்தது. | இன்னல்களில் இருந்து விடுவிக்கும் சமூக நிகழ்ச்சித் திட்டமாக மேற்கொள்ளப்பட்டது. இந்த செயற்திட்டம் பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்தது. |

## 1.8 வரி பிரமாணங்களுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 ஆம் ஆண்டுக்குரிய காசு அடிப்படையில் பெறுமதி சேர் வரி பெறுமதி ரூபா 110.91 மில்லியன் மீளாய்வாண்டின் இறுதி வரையில் மேலும் செலுத்த வேண்டியதாகக் காணப்பட்டது. கம்பனியின் தொழிற்படு மூலதனத்திற்காக அந்த வரித் தொகை பயன் படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாகக் காணப்பட்ட காசு அடிப்படையில் செலுத்த வேண்டிய VAT வரித் தொகை ரூபா 110.91 மில்லியன் ஆகும். | செலுத்த வேண்டிய வற் வரி அடுத்து வரும் மாதத்தின் 20 ஆம் திகதி அல்லது அத்திகதிக்கு முன்னர் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பபடல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டுக்குரிய செயற்பாட்டு விளைவுகள் ரூபா 123.98 மில்லியன் வரிக்கு முன் தேறிய இலாபமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் வரிக்கு முன் தேறிய இலாபம் ரூபா 81.48 மில்லியன் ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 42.5 மில்லியன் அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. பிரதான வருமானம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 759 மில்லியனால் அதாவது 26 சதவீதத்தினாலும், ஏனைய வருமானம் ரூபா 9.15 மில்லியனாலும் 31 சதவீதத்தினாலும் உயர்வடைந்து சென்றமை இந்த அதிகரிப்புக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது ஊழியர் கிரயம் ரூபா 702.87 மில்லியனால் அதாவது 27 சதவீதத்தால் மற்றும் தாபன மற்றும் ஏனைய செலவினங்கள் ரூபா 23.24 மில்லியனால் அதாவது 13 சதவீதத்தாலும் உயர்வடைந்து சென்ற போதும் வருமான அதிகரிப்பின் சதவீதத்துடன் ஒப்பிடும் போது செலவின அதிகரிப்பின் சதவீதம் குறைவாக இருந்தது.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் முக்கிய பகுப்பாய்வு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரிய நிறுவனத்தின் நிதி விளைவுகளை மதிப்பீடு செய்த போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| விபரம் | 2023<br>ரூபா<br>மில்லியன் | 2022<br>ரூபா<br>மில்லியன் |
|---|---|---|
| வருமானம் | 3,638.35 | 2,879.23 |
| ஏனைய வருமானம் | 38.25 | 29.09 |
| தாபன மற்றும் நிருவாக செலவினம் | 206.60 | 183.36 |
| மொத்த செலவினம் | 4.94 | 5.27 |

(அ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது கம்பனியின் வருமானம் 26.37 சதவீதத்தினால் அதிகரித்திருந்ததுடன் அதற்காக மீளாய்வாண்டின் போது பாதுகாப்பு சேவை வருமானம் 12.25 சதவீதத்தாலும், மனித வலு வருமானம் 86.12 சதவீதத்தாலும் அதிகரித்திருந்தமை பிரதான காரணமாக இருந்தது.

(ஆ) தாபன மற்றும் நிருவாக மற்றும் ஏனைய செலவினங்கள் 12.68 சதவீதத்தினால் அதிகரித்திருந்ததுடன் அதற்காக கம்பனியின் மோட்டார் வாகன பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு செலவினங்கள் 126.16 சதவீதத்தால் அதிகரித்தமை காரணமாக இருந்தது. விளம்பர செலவினமும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 124.46 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

### 2.3 விகிதாசார பகுப்பாய்வு

சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான கம்பனியின் சில முக்கிய விகிதங்கள் கடந்த ஆண்டுடன் ஒப்பீடு செய்து கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | 2023<br>ரூபா<br>மில்லியன் | 2022<br>ரூபா<br>மில்லியன் |
|---|---|---|
| மொத்த இலாப எல்லை (சதவீதம்) | 8.1% | 8.37% |
| தேறிய இலாப எல்லை (சதவீதம்) | 2.41% | 2.15% |
| நடைமுறை விகிதம் (தடவைகளின் எண்ணிக்கை) | 1.49:1 | 1:54.1 |
| கடன்பட்டோர் புரள்வு விகிதம் (தடவைகளின் எண்ணிக்கை) | 2.57 | 2.67 |
| கடன் சேகரித்தல் காலம் (நாட்களின் எண்ணிக்கை) | 142 | 136 |

(அ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது கம்பனியின் மொத்த இலாப விகிதம் 0.27 சதவீதத்தால் குறைவடைந்திருந்ததுடன் இதற்காக கம்பனியின் வருமானம் 26.37 சதவீதத்தால் அதாவது ரூபா 759.13 மில்லியனால் அதிகரிக்கின்ற போது விற்பனைக் கிரயம் 26.64 சதவீதத்தால் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

(ஆ) ஏற்றுக்கொள்ளலாக 2:1 விகிதத்தில் காணப்பட வேண்டிய நடைமுறை விகிதம் 1.54 : 1 முதல் 1.49 : 1 வரை முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக மேலும் வீழ்ச்சி அடைந்திருந்தது. இதற்காக வியாபார கடன்கொடுத்தோர் மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய மீதியில் 33.61 சதவீதம் அதிகரித்திருந்தமை காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்தினின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனி தனது பிரதான அலுவலக கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக அத்துடியவில் அமைந்துள்ள 120 பேர்ச் காணி பிரதான தாய் கம்பனியில் இருந்து 30 வருடங்களுக்கு நீண்டகால வாடகை அடிப்படையில் ரூபா 19.91 மில்லியனுக்கு 2018 ஆம் ஆண்டின் போது பெறப்பட்டிருந்ததுடன் 2024 யூன் வரையில் வாடகைக் காலத்திலிருந்து 06 வருடங்களைக் கடந்திருந்த போதிலும் எந்த ஒரு நிர்மாணங்களும் மேற்கொள்ளப்பட்டிருக்வில்லை. இந்த காணியைச் சுற்றி ரூபா 5.87 மில்லியன் கிரயத்தில் 700 அடி அளவிலான நீண்ட மதில் ஒன்று 2019 ஆம் ஆண்டின் போது நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் தாய் கம்பனிக்கு உரிய பகுதியையும் உள்ளடக்கிய வகையில் அந்த மதில் கம்பனியால் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் அதற்கு மேலதிகமாக அந்த காணியின் பாதுகாப்பு, மின்சாரம் மற்றும் நீர்க் கட்டணத்திற்காக 2018 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ரூபா 2.72 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. காணியின் நடுவில் 33 KVA அதிக மின்வலுக் கம்பிகள் இழுக்கப்பட்டிருந்தமையால் நிர்மாணத்திற்காக இந்த காணி தெரிவு செய்தல் கணக்காய்வின் போது பிரச்சனைக்குரியதாக இருந்தது. அவ்வாறே எதிர்காலத்தில் இந்த செயற்திட்டத்திற்காக செய்யப்படுகின்ற செலவினங்கள் சிக்கனமற்ற செலவினமாக இருக்க முடியும் என மேலும் அவதானிக்கப்பட்டது. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றோம். இந்த காணியை மீண்டும் SLLDC இற்கு கையளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் அதன் அடிப்படையில் நிறுவனத்திற்கு மீள செலுத்தப்படுகின்ற நிதி ரீதியான பெறுமதிகள் தொடர்பாக தற்போது தாய்க் கம்பனியினுடன் கலந்துரையாடி தீர்மானங்கள் எடுக்கப்படும். | எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவது தொடர்பில் கவனம் செலுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியில் கடன்பட்டோர் மீதியில் காணப்பட்ட ரூபா 13.40 மில்லியனுக்காக 100 சதவீத அறவிட முடியாக் கடன் ஒதுக்கம் கம்பனி மேற்கொண்டு இருந்தது. அதில் ரூபா 1.43 மில்லியன் அறவிட முடியாக் கடன் ஒதுக்குவதற்கு அந்த கடன்பட்டோர் பட்டியல்களுக்கு உரிய மூல ஆவணங்கள் கம்பனியின் காணப்படாமையே காரணமாகும். | நூற்றுக்கு நூறு சதவீதம் அறவிட முடியாக் கடன் ஒதுக்குதல் பழைய மீதிக்காக இருந்ததுடன் அதன் அடிப்படையில் கடன் தொகையை அறவிடும் சாத்தயவளம் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டமையால் ஆகும். | கடன்பட்டோர் மீதிகளுக்குரிய மூல ஆவணங்களை பாதுகாப்பாக பேணிச் செல்லல் வேண்டும். |
| (இ) | கம்பனியின் வருமானங்களை இனங்காணும் கொள்கை இலக்கம் 2.4.1 இன் பிரகாரம் நம்பத்தகுந்த முறையில் அளவிடலை உறுதிப்படுத்தி பெறப்பட்ட சான்றுகளின் அடிப்படையில் பட்டியல் தயாரிக்காமையின் காரணமாக மீளாய்வாண்டில் சேவை நலன் நிறுவனம் செலுத்துதலை நிராகரித்தமையால் பட்டியலிடப்பட்ட ரூபா 59.07 மில்லியன் வருமானம் இழக்கப்பட்டிருந்தது. இந்த நிலைமையை குறைப்பதற்காக நடவடிக்கை ஏடுக்கப்படுகின்றமை கடந்த ஆண்டின் போது கம்பனியால் கணக்காய்விற்கு பதிலளிக்கப்பட்டிருந்த போதும் அவ்வாறான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கட்டுப்பாட்டு ரீதியான நடவடிக்கைகளை வலுப்படுத்துவதன் மூலம் எதிர் காலத்தில் இந்த நிலைமையை திருப்தி கரமான மட்டத்தில் கொண்டு வருவதற்கு சகல முயற்சிகளும் எடுக்கப்பட்டுள்ளது. | நம்பத்தகுந்த அளவிடல்களை உறுதிப்படுத்தும் சான்றுகளின் அடிப்படையில் பட்டியல் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | விற்பனைக்காக கம்பனியால் 2018 ஆம் ஆண்டின் போது டொலர் 49,537.90 இற்கு (ரூபா 8.73 மில்லியன்) கொள்வனவு செய்யப்பட்ட CCTV உபகரணங்கள் 1,669 இல் மீளாய்வாண்டின் போது 248 உபகரணங்கள் மாத்திரம் விற்பனை செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 2.4 மில்லியன் பெறுமதியான 587 அலகுகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் மீதியாகக் காணப்பட்டது. இதன் காரணமாக கம்பனியின் நிதி தேவையற்ற வகையில் இருப்பில் உள்ளடக்கப்பட்டிருந்தது. பொருள் விற்பனை செய்வதற்கு முடியாமையின் காரணமாகவும், அவை தொழில்நுட்ப ரீதியில் காலாவதியாகியமையின் காரணமாக 2021 ஆம் ஆண்டின் போது ரூபா 3.19 மில்லியன் இருப்பு பதிவழித்தலும் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் பெறுகைகள் வழிகாட்டிகளுக்கு இணங்காத வகையில் கொள்வனவுகளை மேற்கொண்ட உத்தியோகத்தர்களுக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் கம்பனி தவறியிருந்தது. | கொள்வனவுகளை மேற்கொள்வதற்குரியதாக பின்பற்றப்பட்டிருந்த பெறுகை நடைமுறைகளில் காணப்பட்ட நலிவுகள் கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் பரீட்சிக்கப்பட்டு அறிக்கையிடப்பட்டுள்ளது. அந்த அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு முறைப்பாடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சந்தையின் தேவைகளை இனங்கண்ட பின்னர் பெறுகைகளை மேற்கொள்ள வேண்டியிருந்ததுடன் இந்த கொள்வனவுகளை மேற்கொண்ட தரப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | சந்தையின் தேவைகள் தொடர்பாக சரியான எதிர்வுகூறல் இன்றி 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 2.34 மில்லியனுக்கு இறக்குமதி செய்யப்பட்ட Hand Held Metal Detectors with Chargers இல் 1000 அலகுகளில் 506 அலகுகள் மற்றும் ரூபா 10.77 மில்லியன் செலவில் இறக்குமதி செய்யப்பட்ட 08 விடயங்களுக்கு உரிய 731 அலகுகளான பாதுகாப்பு உபகரணங்கள் மீளாய்வாண்டின் போதும் விற்பனை செய்வதற்கு முடியாமல் காணப்பட்டது. இந்த உபகரணங்களின் உத்தரவாத காலம் தற்போது கடந்திருந்ததுடன் விற்பனையின் பின்னரான சேவைகளுக்காக உள்நாட்டு முகவர் ஒருவரும் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. பொருள் விற்பனை செய்வதற்கு முடியாமையின் காரணமாகவும் தொழில் நுட்ப காலாவதியாகியதன் காரணமாகவும் 2021 ஆம் ஆண்டின் போது அந்த உபகரணங்களில் ரூபா 5.18 மில்லியன் இருப்பு பதிவளிக்கப்பட்டிருந்தது. மேலும் இந்த கொடுக்கல் வாங்கல் தொடர்பாக குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் பரிசோதனையும் 2021 ஆம் ஆண்டில் இருந்து மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் கம்பனியால் இதுவரை அந்த கொடுக்கல் வாங்கல் தொடர்பாக எந்த ஒரு பரிசோதனையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கொள்வனவுகளை மேற்கொள்வதற்குரியதாக பின்பற்றப்பட்டிருந்த பெறுகை நடைமுறைகளில் காணப்பட்ட நலிவுகள் கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் பரீட்சிக்கப்பட்டு அறிக்கையிடப்பட்டுள்ளது. அந்த அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு முறைப்பாடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சந்தையின் தேவைகளை இனங்கண்ட பின்னர் பெறுகைகளை மேற்கொள்ள வேண்டியிருந்ததுடன் இந்த கொள்வனவுகளை மேற்கொண்ட தரப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சந்தையின் தேவையினை சரியாக மதிப்பீடு செய்யாமல் கம்பனியால் அமுல்படுத்தப்பட்ட படகு சேவைக்காக மீளாய்வாண்டின் வருமானம் ரூபா 7.81 மில்லியன் ஆக இருந்த போதிலும் படகு சேவையினை நடாத்திச் செல்வதற்காக ஆண்டின் போது செலவிடப்பட்ட உள்ளபடியான கிரயம் ரூபா 14.23 மில்லியன் ஆனமையால் ரூபா 6.42 மில்லியன் நட்டத்தை கம்பனிக்கு செய்ய வேண்டி ஏற்பட்டிருந்தது. சரியான வருமான செலவின முகாமைத்துவம் இல்லாமை இந்த நிலைமைக்கு நேரடியாத் தாக்கமளித்து இருந்தது. | படகு சேவையின் நிதி ரீதியான நட்டங்களை எதிர்காலத்தில் குறைப்பதற்காக நிறுவனம் வினோத படகு சவாரிக்காக அறவிடப்படுகின்ற விலைகளில் திருத்தங்களை மேற்கொள்ளல் மற்றும் சேவைப் பணிகளை குறைத்தல் இந்த பதவியணியினரை குறைத்தலை மேற்கொண்டுள்ளது. | சந்தையின் தேவையினை சரியாக இனங்காணல் மற்றும் கிரயத்தைக் குறைக்கும் வகையில் வியாபார செயற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு கவனம் செலுத்துதல் வேண்டும். |

### 3.3 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் பாதுகாப்பு சேவை மற்றும் ஏனைய சேவைகளுக்காக 3672 உத்தியோகத்தர்கள் சேர்க்கப்பட்டிருந்ததுடன் சேவையில் ஈடுபட்டிருந்த 3156 உத்தியோகத்தர்கள் சேவையில் இருந்து கேட்டு விலகி அல்லது அறிவிக்காமல் சேவையை விட்டுச் சென்றிருந்தனர். இந்த ஊழியர் புரள்வினைக் குறைப்பதற்கு எந்த ஒரு நடவடிக்கையும் கம்பனியால் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பாதுகாப்பு சேவையில் காணப்படுகின்ற மிகவும் குறைந்த சம்பளத்தினால் ஊழியர்களை நிறுத்தி வைத்திருத்தல் மிகவும் வசதியீனமான பணியாகும். ஊழியர்கள் புரள்வை குறைப்பதற்காக ஒரே ஒரு வழியாக சம்பளத்தை அதிகரிப்பதாக இருந்ததுடன் அதற்காக பிரதான சேவை நலன் நிறுவனத்தில் கோரப்பட்டுள்ளது. | ஊழியர் புரள்வை குறைப்பதற்காக உபாய வழிகளை அறிமுகப்படுத்தல் வேண்டும். |